T-UN-594

உ

கடவுள் துணை.

செல்வப்பிள்ளை

27 அகட விகட

# கலியாணச் சிந்து.

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியார்

அவர்களால்

இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

௨

கணபதிதுணை.

வந்தால் வா போனாற்போ

லோபிச்சிந்தென்னும் இயற்பெயருடைய

# அகடவிகட கலியாணச்சிந்து.

தொப்பை வணக்கம் நேரிசைவெண்பா.

கைகாலுந் தொந்தியெலாங் காணபய மாய்வீங்கி
மெய்தூக்க மாட்டாத மேதகனே-பொய்யேன்காண்
செல்வமக னார்க்கு செய்யும்விவா கத்தினுனை
சொல்லா திருப்பேன் துணை.

குரவன் துதி புராண விருத்தம்.

மலரெரிந் தவனைக்காய்ந்த மடையனார் மகனேநல்ல
குலமதை கண்டுக்கொள்ள குருடனே கூறக்கேளாய்
தலமதில் விகடஞானத் தனையனார் மனத்தின்போது
சிலைசுமைக் குரவாவுந்தன் சேவடி யெனக்குப்போற்றி.

தகப்பனாராகிய லோபி சொல் தெம்மாங்கு.

என்மகனே கண்மணியே கொஞ்சம் ஈஸ்பீஷ¬ கற்றவனே
கலியாண மென்றுசொல்லும் ஒரு கடனிருக்கு தெங்களுக்கு

சிந்து.

பெண்ணும்படிந்தாச்சு பணமுந்துகையாச்சு
யிடமுங்குதுந்தாச்சு யெல்லாமுடிந்தாச்சு
முன்னேபெரியவர்கள் முழுதும்பிழைத்திருந்த
நாட்டுப்புறம்போய்வருவோம் நடடாமகனேயப்பா. (நா)

இதுவும் லோபி சொல் தெம்மாங்கு.

பட்டணத்தில்செய்யவென்றால்அப்பாபகல்வேடம்போடவேணும்
தட்டுமுட்டுஆட்டமோடு கொஞ்சம் தலையொடிசிற்கவேணும்

சிந்து.

பத்தில்விழுந்ததொரு பாம்புமடியாதென்று
மெத்தப்பெரியவர்க ளிட்டப்பழமொழிபோல்

ஆயிரங் காலப்பயிர் ஆகையினு லேமகனே
உறவில் கலந்துகொண்டா லொருபோதுங் குற்றமில்லை (நா)

செல்வப்பிள்ளைசொல் தெம்மாங்கு.

உறவும் வரகாச்சி அந்த ஊர்மூஞ்சுங் காஞ்சிப்போச்சு
ஐயோ எனக்கு அந்த ஆதரவுந் தேவையில்லை

சிந்து.

டோண்டுநோபாதரந்த தொல்லையெனக்குவேண்டாம்
நாட்டுப்புறங்களெல்லாம் நான்ஸன்ஸ்வுதவாது
பைகாட்டுபிரதர்களோடு பட்டணந்தன்னிலே
பக்குவமாய்செய்யவெகு மிக்கவுறவிருக்குது

லோபி சொல் தெம்மாங்கு.

அடவுன்படிப்பி லிடியிடிக்க அந்த பாஷையொன்றுந்தெரியலியே
நம்மகுடி வழக்கில்லாத கோணலெல்லாங் காட்டுகிருய்

சிந்து.

ஏரியேமோக்ஷலோகம் ஏத்தமேகைலாசம்
கழனியேபஞ்சாங்கம் கலப்பையேவேதாந்தம்
மண்ணேபிரதானம் மண்வெட்டியேசாஸ்திரம்
யிப்படிப்பிழைத்துவிட்டோம் உன்னிழவுக்கென்னுசெய்வோம்

செல்வப்பிள்ளை சொல் தெம்மாங்கு.

மாட்டைகுத்திமண்கிளறி இந்த மானமதைப் பார்த்தழுகும்
டேப்ளிகட்கன்றிபூல்நீ தொணதொணென்று பேசாதே.

சிந்து.

ஸ்ட்ரீட்முழுதும் பந்தல்வேணும்
வால்சேட்குளோப்புலஸ்தர் வரிசையாய்மாட்டவேணும்
பிரண்டுகள்ஷேகேன்கொடுத்து பலமாயுலாத்தவேணும்
ஷ்டவுட்பீமில்ஸ்லேடிகளால் சதுர்க்கள்நடத்தவேணும்
கச்சேரிகாலட்சேபம் காலைமாலைபாடவேணும்
பிரஞ்சுபுலாகிச்சடிகள் பிச்சைக்கொடுக்கவேணும்
அதிர்வேட்டுமேளவகை அண்டங்கிழியவேணும்
இப்படிநடத்திடாமல் தப்புந்தாறும்பினத்துகிருய் (நா)

## லோபி சொல் தெம்மாங்கு.

பட்டணத்தில் முட்டைவைத்து அப்பாவுன்னை
படிபடியாய்நான்வளர்த்தேன் நண்டுகுடம்விட்டதுபோல்
யென்பணத்தைநாலுவழி யாக்கவந்தாய்.

## செல்வப்பிள்ளை சொல் சிந்து.

நாலுவழிமூணுவழி நாலுமூணும்யேழுவழி
யெந்தவழிபோனுலென்ன வந்தவழிநீபாரு
காடுமழைக்குதங்கே வீடுந்தூரத்துதிங்கே
போடாயுபிளடிசுவர் பணம்போனுல்மயிர்போச்சி

## செல்வப்பிள்ளைசொல்-விருத்தம்.

அல்லோயென்பிராணரான பிரதர்களேதோழமாரே
பொல்லாதகிழவன்யேனே பிடிவாதமியற்றுகிறுன்
நல்லநாள்பார்த்தேன்சற்று நமக்குநீர்உதவிசெய்தால்
யெல்லாருஞ் சேர்ந்துயின்றே யெமபுறங்காட்டலாமே.

## தரு.

எட்டி யுதையுமெந்தன் மிஸ்டரே ஒரே
தட்டாய்தட்டிப்போடும் மிஷ்டரே

மட்டிக்கிழவன்சும்மா மனமும் பொறுக்கமாட்டான்
மயிலைப்போன்ற வேசிமார்க்கு கொடுக்கமாட்டான் எட்

பரத்தையர்சுக மிந்தப்பாவி யறிமாட்டான்
பணத்தை புதைத்துவைத்து பூதம்போல் கார்க்குறுன் எட்

அருமை லேடிகள்சுக மணுவு மறியமாட்டான்
சிறுமணவூர் தமிழ்சொல்லுங் கேட்கமாட்டான் எட்

(வசனம்.) இவ்விதமாகப் பிரண்டுகளோடு கூடிக்கொண்டு அகஸ்மாத்தாக அடீல்தடீல்வேடிக்கை யுண்டுபண்ணி கிழவனுக்கு ஆனமட்டும் சரிப்படுத்தி மூலையில் தள்ளிவிட்டு சினேகிதர்களுக்கு உஷார்படுத்துகிறவிதங் காண்க.

## செல்வப்பிள்ளை ஆனந்தக்களிப்பு.

பைகாட்சிநேகரேவாரும் எந்தன்
பணம்போனுல் போகட்டும் வேடிக்கைபாரும் பை
பெற்றுர் மனம்நொந்து வேகட்டும் நம்ம
பேர்மாத்தி ரங்கோட்டை கொடிபோல்பறக்கட்டும்
உற்றுருறவெல்லாஞ் சாகட்டும் சரியாய்
ஒவ்வொரு ஆயிரம் தூசிபோல் பறக்கட்டும்

வேசியெல்லாம் நம்மை நினைக்கட்டும் தினம்
வீண்தர்மம் செய்வோர்கள் ஆந்தைப்போல் முழிக்கட்டும்
ராஜனென்றே நம்மை மதிக்கட்டும் நல்ல
ரயிட்டான டப்ளார்சு பீட்டின்கள் பறக்கட்டும் பை

சென்னையி லேபுகழ் விளங்கட்டும் சிறு
மணவூர்முனிசாமி தமிழாகச் சொல்லட்டும்
பன்னி யுலகெங்கும் படிக்கட்டும் இதை
பாடிவிற் போர்களுஞ் சிலதுநாள் பிழைக்கட்டும் பை

செல்வப்பிள்ளை சிநேகருக்குச் சொல் விருத்தம்.

திக்கெட்டும் புகழ்படைத்தோ னெனக்கிசைந்த
செல்வர்களே சிங்காரத் தோழமாரே
மற்கட்டுந் தீரர்களே பணங்கரைக்க
மந்திரிபோல் தந்திரங்கள் செய்யும்பாரே
டிக்கட்டும் போட்டுயெந்தன் கலியாணத்தை
திரைகடல்சே ருலகமெலாந் தெரியவிக்க
சொற்கட்டும் வந்தனங்கள் முகூர்த்தகாலம்
சுருக்காக யெழுதிநிறை வேற்றுவீரே.

ஆ ஆ எனது அரிய விரிய பெரிய பிரியமுள்ள செல்வப்பிள்ளையே கேளும் நம்ம டிக்கட்டைப்பார்த்தாலோ இந்திரனனுப்பிய திருமுகம்போ லிருக்கவேணும் அதிலுள்ள சங்கதிகளோ திருமூர்த்திகளும் அறியக்கூடாது ஏனென்றால் தாயுறவென்றும் தந்தையுறவென்றும் மந்தைமந்தையாக வந்து சோத்தையெல்லாம் வஜித்து பார்த்தவிடமெங்கும் பதுங்குவார்கள் ஆகையால் அந்த பணத்தையெல்லாம் சங்கீதாயித்திய பரதநாட்டிய சுகபோகத்திற் சிறந்த நமது அருமைக்கண்மணிகளாகிய லேடிகளுக்கு முத்தாரங்கள் தோடாக்கள் கெண்டாமணிகள் நவலோகங்களா லமைத்த சேலைமுதலிய ஆடையாபரணதிகளைப் பரிசு கொடுப்போமானால் நம்ம பெயர் என்றைக்கும் அழியாதிருக்கும் ஆகையால் டிக்கட் மாத்திரம் இக்கட்டாகவே யிருக்கவேணு மிஷ்டரோ.

செல்வப்பிள்ளை கலியாண டிக்கட்டின் விபரம்.

நொண்டிச் சிந்து.

திகழ்மகிழ்புகழ்படைத்த சென்னைவளர்
செல்வர்களே விபரம் சொல்லுவேன்கேள்
திகழுமிங்கிலீஷ்வருஷம் ஆயிரத்தி
யெண்ணூத்தித்தொண்ணூத்தி யொண்ணில்புகுந்து
நழுவியதமிழாண்டு மகாஜித்து
வருஷங்கூத்தாடிமாதம் நாற்பதாந்தேதி

உக்கிரவாரம்சிங்கமுகத்தில் இருவர்க்கும்
ஒருமித்தசுபதினம் மரணயோகத்தில்
காலையிலொருமணிக்கி வாய்திறந்து
கண்டமீனை துண்டுபூனை லக்கனத்தில்
என்னிடதெஸ்ட்டைபுத்திரன் சிரஞ்சீவி
யேணிபோலேபல்நீண்ட ஆசாமிக்கும்
தானறியாதவூர்க்கு மணியம்
தாசில்முனுஷிபுமகள் யேகபுத்திரி
பஜாரிவேங்கையம்மாள் இருவர்க்கும்
பத்திரிகைசொன்னபடி சுபதினத்தில்
வெள்ளைபட்டணம் நடுவில் ஐயா
கொள்ளைபடித்தான்மூலே பள்ளத்தெருவில்
அப்படியிப்படியுந்தள்ளி டோர்நெம்பர்
ஆனமட்டும்என்வீடு செங்கல்கிரகத்தில்
நடக்கும்முகூர்த்தத்திற்கும் மறுநாள்
நாலுபேர்க்கு முன்கொளுத்தும் அக்கினிபேட்டிக்கும்
இடையுபவாசத்திற்கும் தாங்கள்
யிஷ்டருக்கும்பிஷ்டரொடு கஷ்டமாய்வந்து
மேல்படிசுபகிரிகை அனர்த்தத்தை
மெள்ளமெள்ளநெட்டியே நடத்துவீரென்று
மண்டிபோட்டுவிண்ணப்பஞ்செய்து தங்கள்
கீழானகனத்தைகொஞ்சம் பிரார்த்திக்குறேன் (தந்தின)

செல்வப்பிள்ளை சொல் லாவணி.

வல்லமைமிகுந்த செல்வரேவுமது
கல்விகள்வேறே ஐயா
வளமாய்நோடீசு பலமாயெழுதினீர்
வருவார் வெகுபேரே
வாரமும்யோகமும் இப்படியமைத்திட
வரிந்தீர்பஞ்சாங்கம் ஐயா
வையகத்திலுமக்குநான் கைம்மாறுசெய்திட
வறியேன் மெஞ்ஞானம்
செல்வத்தில்மிகுந்த சீமானென்றெனக்கு
செய்தீர் வுபகாரம்
சிறுமணவூர்முனி சாமிசொல்தமிழுக்கு
செய்வேன் நமஸ்காரம்.

சிநேகிதர் சொல் அலங்காரம்.

டிக்கட்டுமாத்திரமே தீர்ந்ததென்று பெங்கள்பேரில்
யிக்கட்டு நினைக்கவேண்டா மெல்லாவேலையுந் தீர்ந்துதையா நன்

ஐயா, பந்தல்முழுதும் தீர்ந்துபோச்சி
பாவைநடனக் கொட்டாயாச்சு
அந்தமான லயிட்டுதினுசு
ஆயிரம்வரிசை மாட்டியாச்சு

ஐயா, வாழைகமுகு தேங்குமலேகள
வர்னக்கூந்தல் ஈச்சங்குலேகள்
தாழையருகு குருவேர்தவனம்
தனித்தரஞ்சிதம் மதனபாணம்

ஐயா, சகலவேலேயும் முடிந்துபோச்சி
சரியாய்முகூர்த்தம் நெருங்கிபோச்சி (நன்)

(தெ) அமாவர்சைருவுகாலம் ஆறுயிர்க்குமரணயோகம்
வேளேதப்பிபோகுமுன்னே வலித்துகழுத்தி லிழுத்துக்கட்டுவீர்()

ஐயா, பொழுதுவிடிந்தால் கூட்டஞ்சேரும்
பிண்டாசோத்துக் கிழவுகொடுக்கும்
விடியயிரண்டு ஜாமமிருக்கும்
வேலேயிப்பவே நடத்திப்போடும்

ஐயா, வந்தபேர்கள் வழியைப்பார்க்கட்டும்
வாத்தியக்காரர்கள் குந்தியழட்டும்
சார்ஜிகேட்டால் இழுத்துஉதைப்போம்
சம்மன்கொண்டாந்தால் கவுந்துபடுப்போம்

ஐயா, இந்தயுத்தியும் சொல்லவேணுமோ
ஏனேயிப்படி முழித்தாலாமோ (நன்)

(தெ) பஞ்சாங்கம்தப்பாமலே பலஜெனமும்சேராமலே
அஞ்சாறுபேருயர்த்த ருத்திரியில்நடத்திபோட்டார்

ஐயா, பொழுதுவிடிந்து பூனேதூங்குது
போனஜனங்கள் வழியைப்பார்க்குது
பொவுஷுகெட்டுநாம் ஓடிவந்ததில்
பொழைக்கும்பொழப்பும் போச்சேயென்குது

ஐயா, ஜெனங்களிப்படிக் கலேயும்போது
செல்வப்பிள்ளேயும் முடிக்கியெழுந்து
டர்ட்டீபலர் பாப்பான்காணம்
சனவர்பீச்சு யெவனுங்காணம்

ஐயா, போலீஸ்சார்ஜி பண்ணிப்போடுவேன்
பிடித்துஜெயிலுக் கனுப்பிவிடுவேன் (நன்)

(தெ) காசில்லாகலியாணம் கண்குளிரவேநடத்தி
யீசனருளால்வருஷம் யிரண்டிரண்டுபிள்ளைபெருவார் (நன்)

ஐயா, தவரும்பிள்ளைகள் காலையிழுக்க
தாண்டும்பிள்ளைகள் கையைபிடிக்க
உயர்ந்தபிள்ளைகள் வேட்டியிழுக்க
வீடுமுழுதும் யிரச்சலெடுக்க

ஐயா, வீடுநிறைந்த பிள்ளைகளோடு
வயருநிறைந்த குழந்தையோடு
கைகள்நிறைய செல்வரோடு
கடவுளருளால் ஆயிசோடு

ஐயா, செழித்துவாழ்ந்தார் சுகமாயிருந்தார்
பழுத்தகிழமாய் படுத்துமிருந்தார் (நன்)

(தெ) புலவரடிமறவாப் பிள்ளைமுனிசாமிதமிழ்
உலகறிய அச்சிலிட்ட உத்தமரைக்கேள்மனமே (நன்)

கடல்நிறைந்த வுலகுக்குள்ளே
கன்யாகுமரி வளவுக்குள்ளே
ஊருக்கெல்லாம் அன்னையென்று
வுரைக்குஞ்சென்னை நகருக்குள்ளே

அடியே-ஆனைகெவுனி பாளையம்நெடுகே
ஆதியப்பன் வீதிவந்தே
தேனேர்மதுவின் கடையைவிற்றே,
செழித்துவாழும் நல்லமனதே

அடியே-காந்தரிஷியின் கோத்திரமாம்
கண்ணேபெயரும் ஆறுமுகமாம் (நன்)

அகடவிகட கலியாணச்சிந்து

முற்றிற்று.

---